**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'நாட்டார் வழக்காறு' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?
2. 'புராணம்' என்ற சொல் எச்சொல்லில் இருந்து உருவானது?
3. பல்லாங்குழி என்பது யாருடைய விளையாட்டு?
4. நாட்டுப்புற மருத்துவத்தின் வகைகள் எத்தனை?
5. 'காற்றிலே மிதந்த கவிதை' என்ற நூலின் ஆசிரியர் யார்?
6. முத்துப்பட்டனின் மனைவிகள் பெயரினை எழுதுக?
7. தேசிங்குராசாவின் உயிர் நண்பன் யார்?
8. தமிழில் தோன்றிய முதல் அம்மானை எது?
9. நடேச சாஸ்திரி கதைகளைச் சேகரித்து முதன்முதலில் எம்மொழியில் வெளியிட்டார்?
10. தொல்காப்பியர் சுட்டும் 'பண்ணத்தி' எதைக் குறிப்பிடுகின்றது?
11. 'களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

12. 'நிமித்தம்' என்பதன் பொருள் என்ன?
13. தமிழகமெங்கும் பரவலாகக் காணப்படும் வழிபாடு எது?
14. மிகவும் தொன்மையான மருத்துவம் எது?
15. சல்லிக்கட்டு விளையாட்டு எந்தத் திருநாளோடு இணைந்து நடத்தப்படுகிறது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மந்திர சமய மருத்துவம் பற்றி விளக்குக.
2. அமைப்பியல் கோட்பாடு என்றால் என்ன?
3. அல்லி அரசாணி மாலை – குறிப்பு வரைக.
4. வரலாற்றுக் கதைப்பாடல் குறித்து எழுதுக.
5. மழையின் அறிகுறிகள் குறித்த பழமொழிகளைக் குறிப்பிடுக.
6. எத்துவாளிக் கதைகள் என்றால் என்ன?
7. குலதெய்வம் பற்றிய செய்திகளைப் புலப்படுத்துக.
8. கைவினைக் கலைத் தொழிலை வளர்க்கின்ற நிறுவனங்கள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நாட்டுப்புறக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) இராமப்பய்யன் அம்மானையில் வரலாற்று நிகழ்வுகளை ஆராய்க.

2. (அ) கதைப்பாடல்களில் காணப்படும் மொழிநடையினை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாழ்க்கை வட்டச் சடங்குகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) ஆடவர் விளையாட்டுகள் குறித்த செய்திகளைக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

(அல்லது)

(ஆ) குழந்தைப் பாடல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

***